# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்

## தமிழ் மாநிலம்

---

## அநீதி களைய ஆர்ப்பரிப்போம்

அன்பு மிக்க தோழர்களே,

வேலூர் மாவட்ட நிர்வாகத்தின் எதேச்சதிகார போக்கின் காரணமாக வேலூர் மாவட்டத்தில் 140 தோழர்களின் பணி பறிக்கப்பட்டுள்ளது என்பதும், அதற்கெதிராக வேலூர் மாவட்ட சங்கங்கள் 01.08.2014 முதல் தொடர் உண்ணாவிரத போராட்டத்தை நடத்தி வருவதும் இதற்கு முந்தைய சுற்றறிக்கையில் வெளியிட்டிருந்தோம். உண்ணாவிரத போராட்டம் ஆரம்பித்து மூன்று நாட்கள் ஆனபின்பும் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படாமல் மாவட்ட நிர்வாகம் வேடிக்கை பார்த்து வருகிறது. ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் செய்து வந்த பணிகள் தொடர வேண்டி உள்ளது. ஒப்பந்த ஊழியர்களின் வாழ்வாதாரம் தொடர்பாகவும், BSNLன் வளர்ச்சி தொடர்பாகவும் அக்கறை ஏதும் இன்றி மாவட்ட நிர்வாகம் இருந்து வருகிறது.

**எனவே பணியில் இருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ள வேலூர் மாவட்ட ஒப்பந்த தொழிலாளர்களை மீண்டும் பணிகளில் அமர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தமிழ் மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து கிளைகளிலும் 05.08.2014 அன்று உணவு இடைவேளை ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என இரண்டு மாநில சங்கங்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.**

அதிகாரத்தின் துணையோடு தொழிலாளர்களின் அடிவயிற்றில் கை வைக்க நினைப்பவரின் வன்முறையை நமது போராட்டத்தின் வாயிலாக தூள் தூளாக்குவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

| | |
|---|---|
| **(S.செல்லப்பா)** | **(C.வினோத்குமார்)** |
| **மாநில செயலாளர்** | **மாநில செயலாளர்** |
| **BSNLEU** | **TNTCWU** |